# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.230/2019**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 9<br>Defence<br>Court |
| Name | : | மருத்துவர் திரு. செல்வமுருகன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of October 2025.

**(A1, 3, 4, 6, 8, 9 absent. Petition filed and allowed. A7 died. Others Present.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி, சட்டம்சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2016 அன்று அதே துறையில் இணை பேராசிரியராக பணியில் இருந்தபோது,

ஊத்துமலை காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து குற்ற எண். 54/2016 வழக்கில் இறந்துபோன ராஜபாண்டியன் என்ற ஜெகதீஷ் என்ற 40 வயதுடைய ஆணின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தை தலைமை காவலர் 1040 திரு. குத்தாலிங்கம் என்பவர் மூலம்மாலை 03.45 மணிக்கு பெற்றுக்கொண்டேன். அந்த **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 32** ஆகும்.

பிரேதத்தை எங்கள் துறை பிரேத பரிசோதனை அறையில் பொறுப்பு காவலரால் அன்றைய தினம் மாலை 04.10 மணிக்கு அடையாளம் காட்டப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. அந்த பிரேதம் அழுக ஆரம்பித்த நிலையில் காணப்பட்டது. அதன் கை மற்றும் கால் விரல் நகங்கள் வெளிறி காணப்பட்டன. உடல் அழுக ஆரம்பித்த நிலையில் இருந்தது. 1 செ.மீ நீளமுடைய வெள்ளை நிற புழுக்கள் உடம்பில் முன் மற்றும் பின் பகுதியில் காணப்பட்டன. வயிறு ஊதிய நிலையில் காணப்பட்டது. முகத்தில் உள்ள தோல் மற்றும் கழுத்தின் முன் புறம் உள்ள சதைகள் காணப்படவில்லை. இடது கை விரல்களின் நுனிகள் மற்றும் வலது கை விரல்கள் 1 முதல் 3 வரை உள்ளவற்றின் நுனிகள் காணப்படவில்லை. அவை விலங்குகள் கடித்தது போல் காணப்பட்டது. வலது காதில் விலங்கு கடித்த தடம் காணப்பட்டது. பிரேதத்தில் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு,

1) 16 செ.மீ நீளமுடைய கிடைமட்டமான வாய் விரிந்த வெட்டுக்காயம் முன் கழுத்தின் கீழ்புறம் காணப்பட்டது. அது 7 செ.மீ ஆழமுடையதாக இருந்தது. அதன் கீழ் இருந்த சதைகள், ரத்தக்குழாய்கள் மற்றும் நரம்புகள் வெட்டுப்பட்டு காணப்பட்டிருந்தது.

2) 12 செ.மீ நீளமுடைய சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம் கழுத்தின் வலது புறம் காணப்பட்டது. அது 5 செ.மீ ஆழமுடையதாக இருந்தது. அதன் கீழ் இருந்த சதைகள், ரத்தக்குழாய்கள் மற்றும் நரம்புகள் வெட்டுப்பட்டு காணப்பட்டிருந்தது.

3) 3 x 1 x 2 செ.மீ அளவுள்ள சாய்வான வாய்விரிந்த குத்துக்காயம் மார்பின் வலது புறம் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது. அந்த காயத்தின் மேல் விளிம்பு சீரற்றும், கீழ் விளிம்பு சீராகவும் காணப்பட்டது.

4) கீழ்த்தாடை எலும்பு வலது மற்றும் இடது பகுதியில் உடைந்திருந்தது. அந்த உடைந்திருந்த எலும்பிற்கு இடைப்பட்ட பகுதி காணப்படவில்லை.

5) 15 x 2 x 4 செ.மீ அளவுள்ள சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம் கழுத்தின் பின்புறம் இடது பக்கம் காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் மற்றும் பின் தலை எலும்பின் இடது பக்கம் வெட்டுப்பட்டுக்காணப்பட்டது.

6) 12 x 1 செ.மீ x உட்புறம் வரை ஆழமுடைய ஒரு சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம், காயம் எண் 4 க்கு, 1.5 செ.மீ மேல்புறமாக காணப்பட்டது. அதன் கீழுள்ள தலைத்தோல் பின் தலை எலும்பின் இடது பகுதி, மூளையின் வெளிப்புற சவ்வு மற்றும் பின் மூளையின் இடது பகுதி வெட்டுப்பட்டு காணப்பட்டது.

7) 10 x 2 செ.மீ x உட்புறம் வரை ஆழமுடைய ஒரு சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம், பின்தலையின் இடது புறம் காணப்பட்டது. அது காயம் எண் 5 க்கு, 3 செ.மீ மேல்புறமாக காணப்பட்டது. அதன் கீழுள்ள பின்தலை எலும்பு, மூளையின் வெளிப்புற சவ்வு மற்றும் பின் மூளையின் இடது பகுதி வெட்டுப்பட்டு காணப்பட்டது.

8) 7 x 2 x 2 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம், காயம் எண் 5 க்கு, 1 செ.மீ கீழ் மற்றும் பின்புறமாக காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

9) 10 x 2 x 3 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம், காயம் எண் 8 க்கு, 1 செ.மீ கீழ் காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

10) 6 x 1 x 1 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம், காயம் எண் 9 க்கு, 4 செ.மீ கீழ் காணப்பட்டது. அது முதுகின் மேல் பகுதியின் நடுவில் காணப்பட்டது.

11) 5 x 3 x 1 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம், வலது தோள்பட்டையின் பின்புறம் காணப்பட்டது. அந்த காயத்தின்மேல் பகுதியில் இருந்து 2 செ.மீ நீளத்திற்கு வால் காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

12) 3 x 1 x 4 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த குத்துக்காயம், முதுகின் இடதுபுறம் நடுவில் காணப்பட்டது. அது இடதுதோள்பட்டையில் இருந்து 2 செ.மீ

கீழாகவும், பின் நடுக்கோட்டிலிருந்து 8 செ.மீ இடதுபுறமாகவும் காணப்பட்டது. அதன் வெளி விளிம்பு கூர்மையற்றும், உள் விளிம்பு கூர்மையாகவும் காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் குத்துப்பட்டு காணப்பட்டது.

13) 5 x 2 x 7 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த குத்துக்காயம், காயம் எண் 12 க்கு, 1 செ.மீ கீழ் காணப்பட்டது. அதன் வெளி விளிம்பு சீரற்றும், உள் விளிம்பு சீராகவும் காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் குத்துப்பட்டு உட்புறமாக மார்புக்கூட்டின் உள்ளே சென்று இடது நுரையீரலின் பின்பகுதியில் 2 x 1 x 1 செ.மீ அளவுள்ள குத்துக்காயத்தை உண்டாக்கியுள்ளது.

14) 5 x 2 x 10 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த குத்துக்காயம், காயம் எண் 13 க்கு, 4 செ.மீ கீழ் மற்றும் உட்புறமாக காணப்பட்டது. அதன் வெளி விளிம்பு சீரற்றும், உள் விளிம்பு சீராகவும் காணப்பட்டது. அதன் கீழுள்ள சதைகள் குத்தப்பட்டு வயிற்றின் உட்புறமாக சென்றுள்ளது.

15) 7 x 2 x 10 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வாய்விரிந்த குத்துக்காயம், முதுகின் வலது புறம் கீழ்ப்பகுதியில் காணப்பட்டது. அது காயம் எண் 14 க்கு, 10 செ.மீ வலப்புறமாக காணப்பட்டது. அதன் வெளி விளிம்பு கூர்மையற்றும், உள் விளிம்பு கூர்மையாகவும் காணப்பட்டது. அந்த குத்துக்காயத்தின் கீழுள்ள சதைகள், வலது 12 வது விலா எலும்பின் பின் பகுதி ஆகியவை குத்துப்பட்டு வயிற்றின் உட்புறமாக சென்று, கல்லீரலின் வலது பகுதியின் பின்புறத்தில் 2 x 1 x 2 செ.மீ அளவுள்ள குத்துக்காயத்தை உண்டாக்கியுள்ளது.

உள் உறுப்புகள் பரிசோதனையில், இருதயம், இருதய ரத்தக்குழாய்கள், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் அடையாளம் காணும் வகையில் காணப்பட்டன. நாவடி எலும்பு காணப்படவில்லை. இரைப்பையில் 10 மி.லி அளவில் மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது. அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை. அதன் உட்புற சவ்வு நன்கு அழுகிய நிலையில் காணப்பட்டது. சிறுகுடலில் 20 மி.லி அளவில் மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது. அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை. அதன் உட்புற சவ்வு நன்கு அழுகிய நிலையில் காணப்பட்டது. சிறுநீர்ப்பையில் 10 மி.லி அளவில் சிறுநீர் காணப்பட்டது. மூளையின் பகுதி அழுகி பகுதி திரவமான நிலையில் காணப்பட்டது. உள் உறுப்புகள் சேகரிக்கப்பட்டு ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. ரசாயன

பரிசோதனை அறிக்கையில் உள் உறுப்புகளில் எந்தவித நச்சுப்பொருட்களும் கண்டறியப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த **விசரா அறிக்கை அ.சா.ஆ. 33** ஆகும்.

அந்த அறிக்கையை பெற்றப்பின் இறப்பிற்கான காரணம் குறிப்பிட்ட இறுதி அறிக்கையை வழங்கினேன். அதில் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நபர் அவரது கழுத்தின் முன்பகுதியில் ஏற்பட்டிருந்த வெட்டுக்காயங்களினால் இறந்திருக்கலாம் என்றும், காயங்கள் 1 மற்றும் 2 மரணம் விளைவிக்கக்கூடிய காயங்கள் என்றும், மரணம் பிரேத பரிசோதனைக்கு முன்பு 3 லிருந்து 5 நாட்களுக்குள் ஏற்பட்டிருக்கலாம் என்று கருத்து தெரிவித்தேன். நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 34** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi